ஞானபாநு

VOL 3. தொகுதி ௩	1916 March ராக்ஷஸ ௵ பங்குனி ௴	No 12 பகுதி ௧௨

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் விஜயம்.

"தர்மம் குறைந்து அதர்மம்மேலிடும் பொழுது, அதர்மத்தையழிப்பதற்காகவும் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகவும் நான் அவ்வப்பொழுது அவதரிக்கிறேன்" என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் கூறியிருக்கின்றார். உலகில் அநாசாரங்கள் மலிந்து அக்கிரமங்கள் மேலிட்டு ஆணவமும் அகங்காரமும் மிகுந்து உலகினர் பாபத்தையே பெரிதெனப்பாராட்டுங் காலத்தில், ஈஸ்வரனவர் உலகினரைத்தடுத்தாட்கொள்ளக்கருதி மானிடவடிவெடுத்து ஜீவராசிகளை ஈடேற்றுகின்றார். எல்லாத்தேசங்களிலும் எக்காலத்திலும் தர்மம்க்ஷீணிக்கும் பொழுது ஈஸ்வரன் அவதரிக்கின்றானென்பது உண்மை. ஆனால் நாம் ஈஸ்வராவதாரத்தையறிந்து கொள்கிறோம்; மற்றத்தேசத்தினர் அறிந்து கொள்கிறதில்லை. இதுதான் வித்தியாசம்.

* * * *

கீழ் நாட்டினராகிய நமக்கும் மேல்நாட்டினராகிய ஐரோப்பியர், அமெரிக்கர்கட்கும் உள்ளவித்தியாசம் நமது ஜீவிதநோக்கத்திலும் நடையிலும் இருக்கின்றது. நமது பழமையான நாகரிகமோ சைதந்நிய நாகரிகம்; அவர்களுடைய நாகரிகமோ ஜடநாகரிகம். நம்முடைய மனப்போக்கெல்லாம் அந்தர்முகம், அவர்களுடைய மனப்போக்கெல்லாம பகிர்முகம். நம்முடைய நடையுடைபாவனைகளெல்லாம் இகசுகம், பரசுகம் இரண்டிற்கும் சாதகமானவை; அவர்களுடைய நடையுடைபாவனைகளெல்லாம் இகசுகத்துக்கே சாதகமானவை. நாமோ நம்முடைய விஷயசுகங்களைச்சுருக்குகிறோம்; அவர்களோ அவர்களுடைய விஷயசுகங்களைப் பெருக்குகிறார்கள். நாம் பார்ப்பவற்றையெல்லாம் ஞானக்கண்களால் ஈஸ்வரனுக், ஞானமயமாகப் பார்க்கிறோம். அவர்கள் பார்ப்பவற்றையெல்லாம் ஊனக்கண்களால் உலகப்பொருள்களாகப் பார்க்கின்றார்கள். நமக்கும் அவர்களுக்கும் இத்தகைய வித்தியாசங்கள் இருப்

பதினாலே, நாம் ஈஸ்வராவதாரத்தையறிந்து கொள்வதும் அவர்கள் அறிந்து கொள்ளாமற்போவதும் ஆச்சரியமன்று.

* * *

புண்ணியபூமியாகிய இப்பாரத நாட்டில் ஈஸ்வராவதார புருஷர்கள் அடிக்கடி பிறந்துவருகிறார்கள். பாரதநாட்டிலேபாபம் அதிகரித்து கொடுமை மிகுந்து எங்கும் இருள் சூழ்ந்துகொண்ட பொழுதெல்லாம் மகாபுருஷர்கள் பலர் அவதரித்து எண்ணற்ற ஜீவராசிகளுக்கு ஒளி கொடுத்து உதவியிருக்கிறார்கள். ஸ்ரீ ராமர், ஸ்ரீகிருஷ்ணர், புத்தர், சங்கரர், ராமாநுஜர் முதலியவர்களெல்லோரும் அவதாரபுருஷர்களே. சாந்தகுணமும் நன்னடத்தையும் சமாதானமும் ஜனங்களிடத்தினின்றும் அகன்று, தேசமானது தியங்கித் தவிக்கும் காலத்தில் அதிதீவிரதர வைராக்கிய சாலிகளாய், உயிர்போயினும் ஒருபொய் சொல்லாத உத்தமர்களாயுள்ள "கலங்காத நெஞ்சுடைய ஞானதீரர்" கள்சிலர் தேசபீடை நீங்கி சமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் க்ஷேமமுண்டாகவேண்டுமென்று ஒரே காலத்தில் சங்கற்பித்துக்கொள்ள, அவர்களுடைய பரிசுத்தமான, வைரம்போன்ற மனத்தினின்றும் ஒரேமுகமாகக் கிளம்பிய சங்கற்பங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து ஒரு மகாபுருஷனுடைய அவதாரத்திற்குக் காரணங்களாகின்றன. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் செய்ய வல்லதன்றோ மனம்?

* * *

இங்ஙனம் அவதாரமான ஒருமகாபுருஷனே ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். இவர் 1833-வது வருஷத்தில் கல்கத்தாமாநகரின் அருகேயுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். இப்பொழுது இவரது ஜீவிதசரித்திரத்தை நாம் விரிவாக எழுதவிரும்பவில்லை. ஆனால் இவர் அதிபால்ய முதற்கொண்டே பிரபஞ்சத்தில் விரக்தியடைந்து ஜகன்மாதாவின் தர்சனத்தில் ஆசைமிகுந்து இரவு பகலாகக் கண்ணீர் பெருக்கிக்கரைந்து அழுது, மாதாவின் அருள் பெற்று மாயையைக் கடந்து ஸ்வாநுபவியாக விளங்கினார். அப்பொழுது அவரிடத்திற்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் போவதுண்டு. தம்மைச் சுற்றி யுட்கார்ந்திருக்கும் அவர்களை நோக்கி அவர் பற்பல பழுத்த, சாந்தமொழிகளுரைப்பார். அவ்வமிர்த வசனங்களினால் அநேகர் துக்கநிவிர்த்தி யடைந்தனர். அம்மொழிகள் சிலரால் குறிக்கப்பட்டுப் புஸ்தகரூபமாக வெளிவந்திருக்கின்றன. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ விஜயம் என்னும் நூலின்

பிற்பகுதியில் "உபதேச ரத்தினமாலை" என்னும் பெயருடன் அவருடைய உபதேசமொழிகள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மேற்படி புஸ்தகம் இப்பொழுது கிடைப்பது வெகு அரிதாயிருக்கின்றது. இப்புத்தகம் எத்தனை பதிப்புக்கள் வந்தாலும் தமிழ்நாட்டிற்கு நன்மையே செய்யும்; ஆயினும் இப்புத்தகம் மறுமுறை பதிப்பிக்கப்படாம லிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது.

* * *

இவர் தமது கையெழுத்து இடவும் அறிந்திராதவர்; நிரட்சரகுக்ஷி யென்று சொல்லலாம். ஆயினும் இந்த நிரட்சரகுக்ஷியின் சிஷ்யர் ஒருவர் அந்நிய நாடுகட்கும் சென்று ஆரியமதத்தைப் பிரகாசிக்கச்செய்து உலகிலொரு பெருங்கிளர்ச்சியை உண்டுபண்ணி விட்டாரென்றால், இந்த நிரட்சரகுக்ஷி இப்பொழுது இங்கும் அந்நியநாடுகளிலும் ஆயிரக்கணக்கான ஜனங்களால் பூஜிக்கப்படுகிறாரென்றால், இந்த நிரட்சரகுக்ஷி எண்ணற்ற ஜனங்களுக்கு உயிரையும் ஊக்கத்தையும் அளித்து மனமொடுங்கும்படியான மார்க்கத்தை யுபதேசித்து உபசாந்தியை உண்டுபண்ணி ஈடேற்றுவித்தாரென்றால், உலகில் இதுவரையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் புஸ்தகங்களை யெல்லாம் கற்று சகலவேத சாஸ்திர சம்பன்னன், சதாவதானம் ஜெயபேரிகை, பிரசண்ட மாருத வரகவி யென்று ஒரு முழநீளத்திற்கு மேல்பட்டப் பெயர்கள் தாங்கிப் பலரையும் ஏமாற்றி ஸ்வயநலத்தையே பெரிதாகப்பாராட்டி தேகமே ஆத்மா போகமேமோட்சம் என்று திடமாக நம்பிக்கொண்டு வாதிட்ட எவரையும் வாயடக்கி அகங்கரித்துத்திரியும் மனிதர்களினும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸராகிய நிரட்சரகுக்ஷி பல்லாயிரம் மடங்கு பெரியவரென்பதில் ஐயம் சிறிதும் உண்டோ?

* * *

தாழ்ந்தவகுப்பினரை உயர்த்தப்பாடுபடும் தற்காலத்தினர்கள் தாழ்ந்தவகுப்பினரெனப் படுபவர்களைத் தாழ்ந்தவர்களாகவே நினைத்துக்கொண்டு அவர்களை உயர்த்துவதற்குத் தாங்கள் என்னவோ ஈஸ்வரனிடத்திலிருந்து அதிகாரம் பெற்று வந்திருப்பவர்கள்போல நடித்துக்கொண்டு கர்வத்துடன் வெளிக்குச் சிலபிரிய வசனங்களைப்பேசுகிறார்கள். இச்செய்கை தாழ்ந்தவர்களை உயர்த்திவிடுமா? ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருபறையனுடைய குடிசைக்கு இராவிற்சென்று அக்குடிசையின் கொல்லைப்புறத்தைத் தினந்தோறும் தமது தலையிலுள்ள ரோமங்களால் பெருக்கி சுத்தம்

செய்து விட்டுவந்து விடுவாராம். இத்தகைய தாழ்மையுள்ள வர்களல்லரோ தாழ்ந்தவர்களை உயர்த்துபவர்கள்? இதனால் தற்காலத்தியசீர்திருத்தக்காரர்கள் ஒவ்வொருவரும் பறையருடைய குடிசைகளைச் சுத்தம்பண்ணிக் கொடுக்கவேண்டுமென்று நாம் சொல்லவரவில்லை. ஆனால், இத்திபாநாட்டிற்குப்புதிய உயிர் அளித்த, நமதுபெருமைகளையும் மேன்மைகளையும் நமக்கென்றே ஸ்திரப்படுத்திவைத்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரே பறையனுடைய குடிசையைச் சுத்தம் செய்வதை ஒருபாக்கியமாகக் கொண்டாராதலால், இச்சீர்திருத்தக்காரர்கள் அங்ஙனம்செய்தால் இழிவையடைந்துவிட மாட்டார்கள்.

* * * *

" தீரத்தினால் துறவு சேராம லிவ்வுலகில்
பாரத்தனம் பேசல் பண்போ பராபரமே."

என்றார் ஸ்ரீ தாயுமானவர். துறந்து விடுதல், சகலபற்றுக்களும் அற்று சர்வ ஸ்வதந்திரனாதல், சர்வசங்க பரித்தியாகம் செய்தல் எல்லோர்க்கும் எளிதன்று. தீரர்களாலேயே பிரபஞ்சப்பற்றை விட்டுவிடுதற்கு முடியும்; சோம்பேறிகளாலும் பயங்காளிகளாலும் முடியுமா? அக்கருத்தைத் தழுவியேயன்றோ மஸ்தான்சாயபு அவர்களும்,

" மீசை முளைத்த ஆண்பிள்ளைச் சிங்கங்களானக்கால் வெளியே வாருங்கள் காணும்" என்றார். உலக பந்தங்கட்குட்பட்டு ஓயாமல் கவலையும் துக்கமும் குடிகொண்டு உழலும் மானிடர்களைப் பெண்பிள்ளைகளென்றே கூறிவிட்டார் போலும்! ஒருவேளை ஆண்பிள்ளைகளென்று இவர் ஒப்புக்கொண்டாலும், ஆண்பிள்ளைச் சிங்கங்க ளல்லவென்று தெளிவாகக் கூறிவிட்டார். அநந்தகோடி ஜன்மங்களாக மேன்மேலும் நீண்டுகொண்டே தொடர்ந்து வரும் வாசனைச் சங்கிலிகள் ஜீவனை கையைக்காலை அசைக்க ஒட்டாதபடி நிர்ப்பந்தமாகப் பிணைத்துக் கட்டியிருக்கின்றன. ஈரேழுபதினான்கு உலகங்கட்கும் ஏகச்சக்ராதிபத்யம் செலுத்தும் சக்கரவர்த்தியாயினும் சரியே, லட்சக்கணக்கான பெரும்படைகளை ஒரே காலத்தில் போர்முனையில் எதிர்த்து ஜெயிக்கவல்ல வீராதிவீரனாயினும் சரியே, மன்மதனையும் பின்னிடச்செய்யும் அழகு படைத்தவனாயினும் சரியே, உலகையெல்லாம் பிரமிக்கச் செய்கின்ற அதிமேதாவியாயினும் சரியே,

எல்லோரும் வாசனைச் சங்கிலிகளினால் கட்டுபபட்டேயிருக்கின்றனர். இச்சங்கிலிக்கட்டுக்களினின்றும் திமிறிக்கொண்டு இவற்றை உடைத்தெறிந்து ஸ்வதந்திரமாக வெளிக்கிளம்புபவன் எவனோ, அவனே துறவி; அவனே தீரன்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் இத்தகைய துறவி, அவருடைய சிஷ்யராகிய ஸ்ரீ விவேகாநந்தர் இத்தகைய தீரர். இத்தன்மையோர் நமது நாட்டில் என்றும் இடைவிடாது அவதரித்துக்கொண்டிருத்தலினால்தான் நமது நாடு என்றும் சிரஞ்சீவியாகி எத்தேயத்தினராலும் புகழப்பட்டு விரும்பப்படுகிறது. ஆதலால் இவ்விருதீரர்களும் என்றென்றும் வாழி.

நமது பின்னோக்கம்.

இம்மாதச் சஞ்சிகையுடன் நமது மூன்றாவது தொகுதி முடிவுபெறுகின்றது. நமது "பாநு" இவ்வருடத்தில் நடந்து வந்த மார்க்கத்தைச் சிறிது திரும்பிப் பார்ப்போம். "பாநு" வானது நாளுக்குநாள் வளர்ந்து வருகின்றதென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இவ்வருடத்தில் நமது பத்திரிகை மிகமிகப் பெரிய இடையூறுகளையெல்லாம் ஜெயித்துக்கொண்டும் பொறுக்கவொணாத் துக்கத்தையெல்லாம் சகித்துக்கொண்டும் யாது நேரிடினும் சற்றும் பின் வாங்காமல் ஒழுங்காக வெளிவந்து உலாவுவது ஓர் ஆச்சர்யமேயன்றி வேறன்று. நமது பத்திரிகையானது இதுகாறும் ஒரு பைசாகூட மூலதனமாகக் கொண்டதன்று. விதையில்லாமல் முளைத்த செடியாகும் நமது பத்திரிகை. இது ஆச்சர்யமன்றோ? இச்செடியை மெல்லமெல்லப் பெரியதோர் மரமாக்கிப் பல்லாயிரம் ஜனங்களுக்கு நிழலைக் கொடுத்து இன்பத்தைத் தரும்படியான பாக்கியம் பெறவேண்டுமென்று நாம் இடைவிடாது உழைத்து வருகிறோம். ஆனால் ஜெகன்மாதாவின் சித்தம் எப்படியோ?

இவ் வருடாரம்பத்திலேயே வைகாசி மாதத்தில் இப்பத்திரிகையின் சொந்தக்காரியும் பதிப்பாசிரியையுமாயிருந்த ஸ்ரீமதி மீனாட்சியம்மாள் காலஞ்சென்று விட்டது இப்பத்திரிகையின் ஸ்வபாவிகப் போக்குக்கு ஒரு பெரும் தடையாயேற்பட்டது. சென்னை பிரதான ராஜதானி நியாயாதிபதியிடத்தில் பத்திரிகை

நடத்தும் பாத்தியதையையும் அதிகாரத்தையும் ஸ்ரீசுப்பிரமணிய சிவம் தமக்குக் கொடுக்கவேண்டுமென்று மனுச்செய்து கொள்ளவே, நல்லவேளையாய் அநுமதியும் கிடைத்தது. பின்னர் இவ்வருஷத்தில் நூதனமாக மாதந்தோறும்சஞ்சிகையுடன் ஒருபடம் சேர்க்கப்பட்டது. முந்திய இரண்டு வருஷகாலமாக 24 பக்கங்களுடன் நடந்து வந்த "ஞானபாநு" இவ்வருஷத்தில் 32 பக்கங்களுடையதாக்கப்பட்டு பிரதி மாதமும் படத்துடன் வெளிவந்தாலும், வருஷச்சந்தா சிறிதேனும் மிகுதிப்படுத்தப் படவில்லை. ஆனால், இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் கொடிய யுத்தம் காரணமாகக் காகிதங்களின் விலை மிதமிஞ்சி ஏறிவிட்டது; அந்த விலைக்கு வாங்கத் தயாராயிருந்தாலும், காகிதம் கிடைப்பதே அரிதாய்விட்டது. நமது பத்திரிகையை இப்பொழுது ஆரம்பிக்கப் போகும் வருடத்திலிருந்து வாரப்பத்திரிகையாக்கித் தமிழ்நாட்டின்கண் சக்தியும் செல்வாக்கும் மிகுந்த பத்திரிகை இதுவேயென்று எல்லாரும் சொல்லும்வண்ணம் செய்யவேண்டுமென்று இவ்வருடாரம்பத்திலிருந்து பகற்கனவு கண்டுகொண்டிருந்தோம். ஆனால் ஈஸ்வரனுக்கு சம்மதமில்லை. சென்ற இரண்டு மாதகாலமாக நேரிட்டிருக்கும் காகிதப்பஞ்சத்தை நினைத்தால், மாதப்பத்திரிகையே அதிக கஷ்ட நஷ்டங்களின் பேரில் வெளிவர வேண்டும்போலத்தோன்றுகிறது. ஆதலால் நம்முடைய பத்திரிகையை மாதப்பத்திரிகையாகவே அடுத்தவருடமும் நடத்துவதென்றும் அதன்பிறகு ஈஸ்வராக்ஞையையெதிர்பார்ப்பதென்றும் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் இம்மாதத்திலிருந்து சஞ்சிகையுடன் படம் சேர்ப்பதை நிறுத்தியிருக்கிறோம்; வழக்கம்போல நமது பத்திரிகை 32 பக்கங்களுடன் வெளிவந்து கொண்டிருக்கும்.

"விவேக சூடாமணி" என்று ஆதிசங்கரருடைய அருமையான நூலின் மொழிபெயர்ப்பு நமக்குக் கிடைக்கவே அதை அச்சிடலாமென்று சுமார் 5 சஞ்சிகைகளில் மாதந்தோறும் எட்டுபக்கம் வீதம் பிரசுரித்து வந்தோம். இது நடுவில் நிறுத்தப்பட்டதற்கும் காரணம் காகிதப்பஞ்சமே. கூடிய சீக்கிரத்தில் தொடர்ச்சியையும் பிரசுரிப்பதற்கு முயற்சிசெய்து கொண்டிருக்கின்றோம்.

ஸ்ரீஸ்வாமி விவேகாநந்தரின் மொழிகளைத் தமிழர்களுக்கு அறிவித்து ஊக்கத்தை யுண்டுபண்ணி உயிரளிக்க வேண்டுமென் பதே நமது பத்திரிகையின் பிரதான நோக்கமாதலால், இடை விடாது அவற்றையே பெரிதும் பிரசுரித்து வருகிறோம்.

தனித்தமிழில் வியாசம் எழுதுவோர்களுக்கு இனம் ரூபா ஐந்து எனப் பிரசுரித்திருந்தபொழுது, வந்த வியாசங்களிலொன் றேனும் தனித்தமிழில் இல்லையாதலால், ரூபா பத்து இனம் கொடுப்பதாகப் பிரசுரித்தோம். இப்பொழுது வந்த வியாசங்க ளில் ஒன்றே தனித்தமிழிலா யிருப்பது. அதிலும் ஒருவார்த்தை வடமொழியினதோ தென்மொழியினதோவெனச் சந்தேகத்தில் வந்து இப்பொழுது பண்டிதர்களால் யோசனைசெய்யப்பட்டு வரு கிறது.

இவ்வருடத்தில் சென்ற சிலமாதகாலமாக "விஸ்வாமித்ரர்" என்ற ஒருவர் நமது சஞ்சிகையில் பலசரக்குக் கடையொன்று திறந்திருக்கிறார். "வசிஷ்டர்" என்ற ஒருவர் தாமும் ஒரு பலசரக்குக்கடை திறப்பதற்கு அநுமதிகொடுக்க வேண்டுமென்று நமக்கு எழுதியிருக்கின்றார். நாம் மாதிரி பார்ப்பதற்காக அவ ருடைய சில சரக்குகளையும் அனுப்பிக் கொடுத்திருக்கிறார். சரக் குகள் நன்றாயிருக்கின்றன. ஆனால், "விஸ்வாமித்ர"ருடைய வியாபாரம் தீர்ந்தபின்னர், வசிஷ்டருக்கு அநுமதிச்சீட்டு கொடு ப்பதா? அல்லது ஒருமாதம் இவருக்கும் ஒருமாதம் அவருக்கு மாக இடங்கொடுப்பதா? என்பதைப்பற்றி யோசித்துக்கொண் டிருக்கிறோம்.

கடைசியாக இந்த ராட்சஸ வருஷத்தினிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, நமது பத்திரிகையை ஆதரித்தவர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் விஷயதானம் செய்தவர்களுக்கும் எல்லோ ருக்கும் வந்தனம் கூறுகிறோம். பத்திரிகையைத் தபாலில் சந்தாப் பணத்தைக்கட்டிப் பெற்றுக்கொள்வதாக உத்தரவுசெய்து, பத்திரிகை சென்றபொழுது வேண்டாமென்று மறுத்து நமக்கு வீண்ஸிரயம் செய்வித்த வீணர்களுக்கும் ஒரு வந்தனம்.

ஸ்வதர்மம்.

ஸமஸ்தகோடி ஜீவராசிகளும் சதாசர்வகாலமும் சுகப்ராப்தியையே இச்சிக்கின்றன. பெரியமீன் சிறுமீனைத்தின்பதும், திருடர்கள் திருடுவதும், ஒருஸ்திரீ சம்பந்தமாக ஒருவனை கொலைபுரிவதும், ஸ்திரீபுருஷர்கள் நேசிப்பதும், கோவில் குளங்களை நிர்மாணம் செய்வதும், யக்ஞயாகாதிகள் செய்வதும், யோகிகள் யோகம்செய்வதும், ஞானிகள் தியானம் செய்வதும், முதலான செயல்களெல்லாம் சுகப்பிராப்தி நிமித்தமே. சுகம்! சுகம்! சுகம்! என்று ஏக்கம் பிடித்துத் திரிகிறார்கள் மானிடர்கள். எவரெவருக்கு எதெது சுகமென்று தோன்றுகிறதோ அச்சுகத்தையடைய முயல்கிறது சகஜமாய்விட்டது. முயற்சிகளெல்லாம் நிஷ்பலமாய்விட்டால் வந்துவிடுகிறது மஹத்தான துக்கம் முயற்சிகள் பலித்திருந்தால் ஆ! என்ன சுகம் அடைந்திருப்பேன், என்று ஏங்கத்தலைப்பட்டு விடுகிறான்; மதியை இழந்துவிடுகிறான், செய்வது இன்னதென்று அறியக்கூடாமல் பயித்தியம்பிடித்தவன்போல் திரியத்தலைப்பட்டு விடுகிறான். இப்படி இருக்கையில் மனதில் ஒருதோற்றம் உண்டாகிவிடுகிறது. இன்னொருசுகத்தையடைய ஒருயோசனை உற்பவித்து விடுகிறது. இச்சுகத்தையனுபவிக்கத்தக்க செயல்களைச் செய்ய ஆரம்பித்து விடுகிறான். பலிதமானால் சுகானந்த சாகரத்தில் மூழ்கிவிடுகிறான். இதுவும் சிறிதுகாலந்தான். மனம்சஞ்சலித்துக்கொண்டேயிருக்கிறது. இதுவே பிரகிருதிநீதி. ஒவ்வொரு நிமிஷமும் மஹத்தான மாறுதல்கள் சம்பவித்துக் கொண்டே இருக்கின்றன. இதைத் தடுக்கமுடியாது. இதை எதிர்த்துச் செல்லவும முடியாது. இதற்கு அனுகுணமாகச் செல்வதேசாத்தியம்; இந்தமார்க்கத்தை அறிவதேபுத்தி. இந்தமார்க்கத்தையுணர்ந்து அனுஷ்டித்துவிட்டால் ஆ! சதா ஆனந்தமே. எதற்காக யோகிகளெல்லாம் காயக்கிலேசம் செய்து மஹத்தான தபசுகளைச் செய்கிறார்களோ எந்தக்கைவல்ய முக்தியை இச்சித்து சுவாஸபந்தனம் செய்து ஸமாதியில் வீற்றிருக்கிறார்களோ, அந்தப் பரமபதத்தை யடைவிக்கும் மார்க்கம் இதுவே. ஸ்வதர்ம அனுஷ்டானம்தான். பிரம்மக்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தங்கள்தங்கள் தர்மங்களை அனுஷ்டித்துவிட்டால் உயர்வேது ? தாழ்வேது ? சுகதுக்கங்களுண்டோ? இன்பம் துன்பம், சுகம்துக்கம்முதலான த்வந்துவங்களே பூண்டற்

றுப்போய்விடும். புருஷஸூக்தத்தில் சொல்லியிருக்கிறபடி, பிராமணர்கள் மஹாவிஷ்ணுவின் சிரசிலிருந்தும், க்ஷத்திரியர்கள் புஜங்களிலிருந்தும், வைசியர்கள் இடையிலிருந்தும் சூத்திரர்கள் பாதங்களிலிருந்தும் உத்பவித்தார்கள் என்னும் காரணத்தால் மானிடர்களுக்குள் உயர்வுதாழ்வு ஏற்பட்டுவிட்டது என்று வாதிப்பது தகுமோ? யுக்தமோ? தர்மமோ? தர்மத்தையுணரா மூடர்களே இம்மாதிரியான குதர்க்கவாதிகளாவார்கள். இதன் கருத்தாவது, மானிடர்களெல்லாம் தங்கள் தங்கள் தர்மங்களைசிராகசெய்துகொண்டு சுகமாகக் காலங்கழிக்கவேண்டுமென்பதொன்றேதவிர வேறில்லை. ஸ்ரீராமாவதாரம் உண்டானது ஸ்வதர்ம போதனை நிமித்தமே. இவ்வுலகில் ஸமஸ்தகோடி ஜீவராசிகளும்சுகப்ராப்தியடையும்படியான, உத்தமமான, ஸத்யமார்க்கத்தைப் போதித்துதானும் நடித்துக்காட்டின மஹான் ஸ்ரீராமனுடைய சரிதத்தைக் கேட்டால் மட்டும்போதுமோ! ராமாயணத்தின் உயர்வைச் சொல்லும் பொருட்டு சிலேடையாக கேட்டமாத்திரத்தில் முக்திபடைந்துவிடலாம்! என்று எழுதப்பட்டிருக்கும் ஒருவாக்கிய ஆதாரத்தை முன்னிட்டு, ஸ்வதர்ம அனுஷ்டானத்தை துலைத்துவிட்டு, மனம்போனபோக்கெல்லாம் போய்க்கொண்டு, ஒருவிபத்துவந்தகாலத்தில் ராமா என்று சொல்லிவிட்டால் பூர்வம்செய்த கர்மத்தின் பலன் நீங்கிவிடுமோ? ஒருபொழுதும் நீங்காது. அவரவர் செய்யும் கர்மங்களை அவரவர் அனுபவித்தே தீரவேண்டும். ஒரு காட்டில் வேட்டையாடிக் கொண்டிருக்க ஒருவேடன், ஒருமனிதனை பிசகாக ஒருமானென்று எண்ணி லக்ஷியம்வைத்து, அம்பு எறிந்தபிறகு, லக்ஷியம்வைக்கப்பட்டது மனிதனென்று தெரிந்தால், விடப்பட்ட அம்பு மனிதனைக்கொல்லாமல் விட்டுவிடுமோ! இப்படிச்செய்யத்தான் வேடனால் சாத்தியமோ! ஸ்ரீ ராமகீதை, ஸ்ரீ பகவத்கீதை, உபநிஷத்துகள் முதலான உத்தமமான கிரந்தங்களெல்லாம் ஸ்வதர்ம அனுஷ்டானத்தையே சிலாகித்துக் கூறுகின்றன. 'ஸ்வதர்ம' அனுஷ்டானமே வீரியத்தைத் தரும், சக்தி தரும், முக்தியும்பெறலாம். தீனர்களை ரக்ஷிப்பது வீரர்களுடைய 'ஸ்வதர்மம்'. வயதில் பெரியோர்களை ரக்ஷிப்பது சிறியோர்களின் 'ஸ்வதர்மம்'. அவிவேகிகளுக்குப்போதிப்பது விவேகிகளின் 'ஸ்வதர்மம்'. ஸ்திரீகளின் கற்பு அழியாமல் பாதுகாப்பது புமான்களின் 'ஸ்வதர்மம்'. உலகில் சமஸ்தகோடி ஜீவராசிகளும்ஒன்றோ

டொன்று நேசித்து, பிரகிருதி நீதிக்குட்பட்டு, சுகமாக வாழ்ச் செய்வது மானிடர்களின் 'ஸ்வதர்மம்'. இம்மாதிரியாகவே நற்செய்கை செய்வது தன்னுடைய 'ஸ்வதர்மம்' என்னும் உணர்ச்சி மேலிட்டு, அதேநாட்டமாய் ஒவ்வொருவரும் இருத்தல்வேண்டும். இந்த 'ஸ்வதர்ம' உணர்ச்சிமேலிட்டு, அதேநாட்டமாய் இருந்துவிட்டால், மமதை அஹங்காரம், பொறாமை, பேராசை, பொய், புரட்டு, திருட்டு முதலான தீயகுணங்களெல்லாம் பூண்டற்றுப் போய்விடும். உணவும், உடையும் மானிடர்களுக்கு அத்தியாவசியமானவைபோல் இந்த 'ஸ்வதர்ம' போதனையும் மிக்க அவசியமானது. அத்தியாவசியமான உணவு உடைகள் சேகரிப்பதற்கு மனிதர்கள் பாடுபடுவதுடன் அநாவசியமான, அல்பசுகங்களை விளைவிக்கும்படியான சாமான்களையும் செய்யமிகப்பாடுபடுகிறார்கள் நிலங்களை உழுது தான்யங்கள் சேகரிக்கிறார்கள், பருத்தி, கம்பளம் முதலானவைகளைக்கொண்டு ஆடைகள்செய்ய லக்ஷக்கணக்காக செலவிட்டு வேலைமாளிகைகள் ஸ்தாபிக்கிறார்கள். இப்படியே மனிதருடைய அல்பசுகங்களைக் கருதி அநேகமுயற்சிகள் வெகு ஊக்கத்துடன் செய்யப்படுகின்றன. ஆனால் எது முக்கியமோ, எது சர்வஜகத்துக்கும் சுகப்ராப்தகாரணமாகுமோ, எதையுணர்ந்துவிட்டால்சதா ஆனந்தமே உண்டாகிவிடுமோ, அந்தப் பரமபத மார்க்கமான ஸத்யமார்க்கத்தை ஸ்தாபிக்கவும், போதிக்கவும் தகுந்த முயற்சிகள் இல்லை. அந்தோ! இதைகவனிக்க மிகவிசனமாயிருக்கிறது. சிலசில விடங்களில் பொது நன்மைக்காகவும். இந்தியஜாதிய முன்னேற்றத்தைக்கருதியும் சபைகளும் சங்கங்களும் ஏற்பட்டிருந்தபோதிலும், ஸத்யமார்க்கத்தில் இவைகளின் உழைப்பு மிகச்சிறிதே' இந்த ஸத்யமார்க்கமான 'ஸ்வதர்ம' அனுஷ்டானத்தை பரவச்செய்வது பாரதமாதாவின் புத்திரர்களின் கடமையாகும் ஓ! பாரத ஜாதீயத்தலைவர்களே! சங்கங்கள் ஸ்தாபனம் செய்வீர்களாக. ஆயிரக்கணக்காக சிறுவர்களுக்கு ஸத்யமார்க்க போதனைசெய்து நாடெங்கும் அனுப்பி ஜனங்களுக்கு ஸ்வதர்ம உபதேசம் செய்துகொண்டே வரும்படியாகப் பாடுபடுவீர்களாக! 'ஸத்யம் வத தர்மம் சர' என்னும் பரமமந்திரம் உலகெங்கும் பரவும்படியாக பாடுபடுவீர்களாக! ஸ்வதர்ம அனுஷ்டான உணர்ச்சியின் ஆனந்த உத்ஸாஹம் உலகெங்கும் பரவிவிட்டால் நிமிஷத்தோறும் கேவலம் பசியால் வருந்திமாய்ந்திடும் லக்ஷக்கணக்

ஏனமானிடர்கள் ரக்ஷிக்கப்படுவார்கள். மனிதனுடைய சுகத்துக்காகத்தான் மற்றஜீவராசிகள் சிருஷ்டிக்கப்பட்டன என்னும் மமதைபொருந்திய மதத்தினால் பூரிக்கப்பட்ட மனிதர்களின் ஜீவஹிம்சையிலிருந்து தப்பிக்கும் வாயில்லா ஜீவகோடிகள். 'அஹிம்சாபரமோ தர்மஹ' என்னும் நீதிசீராக அனுஷ்டிக்கப்பட்டு விடும் உலகெலாம் சுகானந்த சாகரத்திலேயே நீந்தும். இவ்வுன்னதபதவிக்குக்காரணபூதமான பாரதமாதாபுகழ்பெறுவாள்! ஸத்யமார்க்க உணர்ச்சியும் அனுஷ்டானமும் உலகெலாம் ஸ்தாபனமாகுமாறு மஹாசக்தி யருள்புரிவாளாக.

ஸ்வாமி விவேகாநந்தரின் எதிரொலிகள்

(முன்தொடர்ச்சி)

[ஸ்ரீமாந். எம்-ஸி நஞ்சுண்டராவ் அவர்கள் எழுதியது]

ஸிவாஜியும் அவனுடைய நண்பர்களும் தங்களுடைய ஊருக்கு 25-மைல் தூரத்திலுள்ள ஒருபெருங் காட்டிற்குள் நுழைந்தவுடன், ஒவ்வொருவரும் தனித்தனியே வேட்டை பிடிக்கவெண்ணி தனித்தனியாகப் பிரிந்துவிட்டார்கள். ஏற்கனவே மன அமைதியற்றிருந்த ஸிவாஜிக்கு அன்று வேட்டையும் கிடைக்கவில்லை. அக்காட்டில் வெகுதூரம் அலைந்து திரிந்தும் கொல்லப்படக்கூடிய மிருகமாக ஒன்றும் ஸிவாஜியின் கண்களுக்குத் தென்படவில்லை. நடுப்பகலாய்விட்டது, கதிரவனோ உக்கிரமாகக் காய்ந்துகொண்டிருந்தான். ஸிவாஜிக்குக் களைப்பொருபக்கம்; வேட்டையொன்றும் கிடைக்காததினால் அதிருப்தியொருபக்கம்; இந்தஸ்திதியிலிருந்த ஸிவாஜியின் கண்களுக்கு நெடுந்தூரத்தில் பச்சைப்பசேலென்று சிலமரங்களும் அம்மரங்களினூடே திரிந்துகொண்டிருந்த இரண்டு மூன்று மிருகங்களும் தென்பட்டன. ஸிவாஜி மெல்ல மெல்ல அவ்விடம் நோக்கிச்சென்றான். என்ன ஆச்சர்யம்! இரண்டு மூன்று மிருகங்கள் அல்ல, பலமிருகங்கள் காணப்பட்டன. இன்னும் என்ன ஆச்சர்யம்! கரடி, புலி முதலிய துஷ்டமிருகங்கள் மான், முயல் முதலிய மிருகங்களை, எவ்விதத்திலும் தொந்திரவுசெய்யாது அவற்றுடன் கலந்து விளையாடிக்கொண்டிருந்தன. இன்னும் ஸிவாஜி அவ்விடத்தை நெருங்க நெருங்க, இவனுக்கு ஒருவித மகிழ்ச்சியுண்டா

யிற்று; உள்ளம்பூரித்தது. மன அமைதியற்றிருந்த தனக்குத் திடீரென்று மகிழ்ச்சியுண்டான காரணம் இன்னதென அவனுக்கே விளங்கவில்லை; ஆகையால் அங்கிருந்த மிருகங்களையொன்றும் செய்யாமல் அவ்விடத்தை யணுகிச்செல்லவே, இவனுடைய மனமகிழ்ச்சிக்குக்காரணம் இன்னதென வறிந்துகொண்டான்.

பெரியதோர் அரசமரத்தின் அடியில் அன்றிரவு ஷிவாஜியின் கனவில் தோன்றிய உருவத்துடன் ஸ்ரீ ராமதாஸர் நிஷ்டையில் உட்கார்ந்திருந்தார்; அப்பொழுது அவருக்குப் பிரபஞ்சப் பிரக்ஞையே கிடையாது. அக்காட்டிலிருந்த துஷ்டமிருகங்களெல்லாம் அவரை ரட்சிப்பதற்காகவும் அவருக்குப் பணிவிடை செய்வதற்காகவும் இருப்பனபோலச் சுற்றிக்கொண்டிருந்தன. ஆ! ஆ! அவரைக் கண்டவுடன் ஷிவாஜிக்கு உண்டான ஆநந்தத்தை அளவிட்டுக்கூற எவரால்முடியும்? மெல்ல மெல்ல அவர் பக்கல்சென்று, அவரெதிரே யுட்கார்ந்துகொண்டு அவரையே தியானித்துக் கொண்டிருந்தான். மாலையாய்விட்டது; ராமதாஸருடைய நிஷ்டை கலையவேயில்லை. ஷிவாஜி தனது ஊருக்குச் செல்லல்வேண்டும், இல்லையேல், குடிகள் தேடத்தொடங்கிவிடுவார்கள். ஷிவாஜிக்கு ராமதாஸரைவிட்டுப்பிரியவும் மனம் இல்லை; குடிகளுக்கும் எவ்வித மனத்தாங்கலும் உண்டாகலாகாது. இவ்விதமாகச் சிறிதுநேரம் ஷிவாஜி கலக்கமுற்றிருந்தானாயினும், இப்பொழுது ஊருக்குச் செல்வதென்றும் மறுநாட்காலையில் மறுபடியும் ராமதாஸரிடம் செல்வதென்றும் தீர்மானித்துக்கொண்டு தனது வீடுநோக்கிச் சென்றான். அன்றிரவுமுழுதும் அவனுக்கு நித்திரைபிடிக்கவேயில்லை; ராமதாஸரையே தியானித்துக்கொண்டிருந்தான்.

மறுநாள் விடிந்தது; ஷிவாஜி ஸ்நாநம்செய்து தனது காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு ராமதாஸர் இருந்த இடம் நோக்கிச்சென்றான். முந்நாள்போலவே இன்றும் அவரெதிரில் உட்கார்ந்து அவரையே தியானம் பண்ணிக்கொண்டிருந்தான். அன்றுகூட ஸ்ரீ ராமதாஸர் கண்விழிக்கவேயில்லை; ஷிவாஜி அன்று மாலையிலும் மனச்சமாதானமில்லாமல் ஊருக்குத் திரும்பவேண்டியிருந்தது. மறுநாட்காலையிலும் சென்றான்; அன்று மாலையிலும் பயன்பெறாது திரும்பினான். இதற்குள்ளாக, ஷிவாஜியினுடைய மந்திரிகளும மற்றுமுள்ள பிரபுக்களும் ஷிவாஜி தினந்தோறும் ராஜ்யகார்யங்களை அசட்டை செய்துவிட்டு காட்டுக்குச்செல்வ

தையும் அங்கு காட்டுமிருகங்களையும் அடக்கித்தனதிஷ்டம்போல ஆட்டிவருகின்ற மகாமந்திரவாதியாகிய ராமதாஸரைப் பார்த்து வருவதையும்பற்றி திகிலடைந்து, கூட்டமாகக்கூடி ஷிவாஜியினிடத்திற்குச்சென்று பின்வருமாறு கூறினர்கள்:—எங்கள் உயிர்க்குயிரான அரசனே, தாங்கள் ராஜ்யகாரியங்களை இப்படியும் அசட்டைசெய்து தினந்தோறும் அந்த மந்திரவாதியினிடத்திற்குச் சென்றுவருவது நன்றாயிருக்கின்றதா? தங்களுக்கு இன்னும் அதற்குத்தக்க வயதாகவில்லை. தங்களையும் அவன் தனது மாந்திரீக சக்தியினல் மயக்கிவிட்டான்போலிருக்கிறது. அவன் மிகக்கெட்டவன். அவன் குழந்தைகளுடன் தானும் ஒரு குழந்தையைப்போல விளையாடி, குழந்தைகளெல்லாம் தன்னைப் பின்தொடரும்படி செய்துவிடுகிறன். காட்டுமிருகங்களெல்லாம் நன்றியுள்ள நாய்களைப்போல அவனுக்குக் கீழ்ப்படிந்து அவனைச் சுற்றிலும் விளையாடிக்கொண்டிருக்கின்றன. அவன் இன்றைக்கோரிடத்திலிருக்கிறன்; நாளை அவன் வெகு தூரத்துக்கப்பாலுள்ள ஊரில் காணப்படுகிறன். தாங்கள் ஏன் அப்பேர்ப்பட்டவனிடத்திற்குப் போகவேண்டும். மத ஆராய்ச்சி செய்யவேண்டுமென்றல், நமது சமஸ்தானத்தில் சகல வேதசாஸ்திர சம்பந்நர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கின்றர்களே; அவர்களைக்கொண்டு வேண்டிய நூல்களை விரித்துரைக்கச்செய்து தெளிந்துகொள்ளலாம். ஆராய்ச்சிதானே அறிவைக்கொடுப்பது. இவ்விதமாகவெல்லாம் இவர்கள் ஷிவாஜிக்குப் புத்திமதி கூறினர்கள். ஷிவாஜி புந்நகையுடன்தான் அடையவிரும்பும் ஞானம் புஸ்தகங்களிலிருந்தாவது பண்டிதர்களிடத்திலிருந்தாவது கிடைக்கக்கூடியதன்றென்றும் சற்குருவின் கடாட்சம் தனக்குச் சீக்கிரத்தில் உண்டாகுமென்றும் கூறி அவர்களையனுப்பிவிட்டு வழக்கம்போல ராமதாஸரிருக்குமிடம் சென்றன். இவ்விதமாக ஒன்பது நாட்கள்கழிந்தன; ராமதாஸர் விழிக்கவேயில்லை. பத்தாவதுநாள் அவர் கண்களைவிழித்து எதிரிலிருக்கும் ஷிவாஜியை நோக்கிப் புந்நகைபுரிந்து அருகேவந்து உட்காரும்படி ஆக்ஞாபித்தார். ஷிவாஜி ஆநந்தபூரிதனகி அவரெதிரில அடியற்றமரம்போல்விழுந்து நமஸ்கரித்தான். ராமதாஸர் "அன்றிரவு உனக்குக் கொடுத்த தேங்காயை நீ என்ன செய்தாய்" என்று ஷிவாஜியைக் கேட்டார். தான் அதைப்பத்திரமாகப் பூஜையில் வைத்திருப்பதாக ஷிவாஜி கூறினன். இக்கேள்வி

யினுல் இவர்தான் அன்றிரவு தர்சனம் கொடுத்தவரென்று ஸிவாஜி உறுதி யடைந்தான். ராமதாஸர் ஸிவாஜியை அருகி லிருந்த ஆற்றில் ஸ்நாநம் செய்துவரும்படி கட்டளையிட்டார். அங் ஙனமே ஸிவாஜி ஸ்நாநம்செய்து வரவே, ராமதாஸர் அவனுக்குத் தாரகமந்திரோபதேசம் செய்தார். ஸிவாஜி ஆநந்தமயமாய் விட் டான். அவனுக்கு ராமதாஸரைவிட்டுப் பிரிவதற்கு மனம் வர வில்லை. அவருடனேயே எப்பொழுதும் இருப்பதற்குத் தனக்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று ஸிவாஜி அவரைக்கேட்டுக் கொண்டான். அப்பொழுது ராமதாஸர் கோபித்தவர்போலப் பாவனைபண்ணிக்கொண்டு "இதற்காகத்தானு நீ என்னிடம் வந் தாய்? நீசாதாரணமனிதனன்று. மகம்மதியர்களுடைய ஏற்றத்தி னுல் தாழ்வையடைந்திருக்கிற தர்மத்தை நீ நிலை நிறுத்தவேண் டும். நீ மிலேச்சர்களையும், பலயீனர்களையும், சாதுக்களையும், பிராஹ்மணர்களையும் ரட்சிக்கவேண்டும். நீ விரும்பும்பொழு தெல்லாம் நான் உன்கூடவேயிருப்பேன். நீ அந்தரங்கபக்தனு யிருந்துகொண்டே, உனது கடமைகளைச் சரிவரச்செய்து க்ஷத் திரிய தர்மத்தை நிலைநிறுத்தவேண்டும்" என்று ஆக்ஞாபித்து, அவனிடத்தில் ஒருதேங்காயையும் ஒருபிடி மண்ணையும் இரண்டு கையளவு குதிரைலத்தியையும் நான்கு கையளவு கற்களையும் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினுர். ஸிவாஜி இவற்றையெல் லாம் கொண்டுவந்து தனது தாயாரிடத்தில் கொடுத்து நடந்தவற் றைக்கூறினுன். அவனுடைய தாயார் அவனைப்பார்த்து, மண், லத்தி, கற்கள் இவற்றின் அர்த்தமென்னவென்று கேட்டாள். ஸிவாஜி அவற்றின் உட்கருத்தை ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டானுதலால், தேங்காயானது தனது மேன்மையைக் குறிப்பிடுகின்றதென்றும், தான் அநேக தேசங்களை ஜெயிக்கப் போகிறதை மண் குறிப்பிடுகிறதென்றும், தான் பெரும்படைக ளுக்குத் தலைமைவகித்துப் போர்செய்யப்போவதைக் குதிரை லத்தி குறிக்கின்றதென்றும், தான் அநேக கோட்டைகளைப் பிடிக் கப் போவதைக் கற்கள் குறிப்பிடுகின்றனவென்றும் பதில் கூறி னுன். ஸ்ரீராமதாஸரிடத்திலிருந்து உபதேசம் பெறும்பொழுது, ஸிவாஜிக்கு வயது இருபத்தொன்றுதான். (வரும்)

நமது பல சரக்குக்கடை

["விச்வாமித்ரர்" எழுதுகிறார்]

"நினைத்தல் வாழ்வதற்குச் சமானம்" என்பது ஒரு நமது தத்துவ சாஸ்திரியின் உண்மையான அபிப்பிராயம். ஒவ்வொருவருக்கும் நினைக்கும் பலம் ஈச்வரனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சிலர் அந்த பலத்தை நல்வழியில் உபயோகிக்கின்றனர்; வேறு சிலர் கெட்டவழியில் பிரயோகிக்கின்றனர்; வேறு சிலர் தமக்கு "நினைக்கும் பலம்" இருப்பதாகவே அறிவதில்லை. யாராகிலும்—சாதாரண மனிதனாகிலும்சரி, சிறந்த வித்வானாகிலும் சரி,—ஏதாவதொன்றைச் சொன்னால் அதை நாம் கண்மூடித்தனமாய் அங்கீகரிக்காமல், அதைப்பற்றி நினைத்து, அது சரியா? தவறா? என்று ஆராய்ந்து பின்னர் நமது அபிப்பிராயத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். சில நிபுணர்கள் ஒருவிஷயத்தைப் பற்றிப்பேசும்போதாகிலும் அல்லது எழுதும்போதாகிலும், உலகத்தில் ஒரே ஒரு அபிப்பிராயம்தான் உண்மையானது; அந்த அபிப்பிராயம் தம்முடையதுதான் என்று எண்ணுகிறார்கள். இந்த எண்ணம் தவறு. நமது வாசகர்களின் ஆராய்ச்சிக்கும் எண்ணும் தொழிலுக்கும் கடினமையான வேலையைக்கொடுக்க நான் உத்தேசித்திருக்கிறேன். பின்வரும் விஷயங்கள் உங்கள் "நினைக்கும் தொழிலுக்கு"ச் சிறந்த ஆஹாரம்.

* * *

உலகம், தர்மம் ஸத்யம் என்கிற கல்தூண்களின்மீது நிற்கின்றதேயொழிய அநியாயம் அதர்மம் என்கிற மணல் குவியல்களின்மீது நிற்கின்றதில்லை. மனிதனது இயற்கைக்குணம் தர்மம் நன்மை என்கிற நற்குணங்களைப் பின்பற்றும் சக்தியை உடைத்தாயிருக்கின்றது. ஏதாவதொன்றை மிதமிஞ்சிப் பின்பற்றும் குணம் துஷ்டஸஹவாஸத்தாலும், அதிகபழக்கத்தாலும், மிகுந்த தைர்யத்தாலும் உண்டாகின்றது.

* * •

ஸ்வயநலம் பாராட்டாத மனிதன் எவனுமில்லை. சிலரிடத்து, சுயநன்மை அதிகமாகவும், வேறுசிலரிடத்துக் கொஞ்சமாகவும் காணப்படுமேயொழிய, லவலேசமும் சுயநயமற்ற மனிதன் பொறுக்கியெடுத்தாலும் கிடையாது. காடுசென்று தவம்புரியும்

துறவியும் தன் ஆத்மாவின் நலத்தை ஒன்றேயே கருதுகிறான். தேசபக்தியும் ஸ்வய நலகுணம்தான். ஆனல் இது விசாலமான, பெரும்பற்றுன சுயநயம்.

*　　*　　*

"கோவிலிலும், மசூதியிலும், ஆசாரங்களிலும், யோகத்திலும் மோக்ஷத்திலும்—ஆகிய எதிலும் கடவுள் அகப்படமாட்டார்" என்கிருர் கபீர். மேல்நாட்டுப் புலவர்களில் சிலர் "கடவுள் இதுவரை எவராலும் அறியப்படாதவர்" என்றும், வேறு சிலர் "கடவுள் எப்போழுதும் அறியப்படாதவர்" என்றும் கூறுகிருர்கள். அப்படியானல் நமது புராணகதைகள் வெறுங்கதைகள் தானு?

*　　*　　*

இன்பத்தை நாம் அனைவரும் அநுபவிக்கிறேம் என்று கருதுகிறேம். ஆனல் பூர்ண இன்பத்தை இதுவரை எவரும் நுகர்ந்தவரில்லை என்கிருர் ஒருபுலவர் பூர்ண இன்பத்துக்கு இரண்டுவித கஷ்டங்கள் இருக்கின்றன. (1) இன்னதுதான் உண்மையான பூர்ண இன்பம் என்பதை அறியப்போதுமான முதிர்ந்த ஞானத்தைப்பெற்றிருத்தல். (2) அறிந்தபின் அந்த நோக்கத்தைத் தவறுதலின்றி நல்வழியில் தைர்யத்துடன் பின்பற்றி அடையவேண்டிய தேஹபலமும் மனேதைரமும் பெற்றிருத்தல். இந்த இரண்டும் ஒரு மனிதனிடம் அரிதாகத் தங்குகின்றன.

*　　*

அனுபவத்தைப்போன்ற சிறந்த உபாத்தியாயர் வேறு யாரும் கிடையாது. அநுபவம் மெதுவாக நமக்குப் பாடங்களைக் கற்பிக்கின்றது; ஆனல் அது நிச்சயமாக சாச்வதமான பாடங்களைக் கற்பிக்கின்றது. ஆனல் இந்த உபாத்யாயர் (அநுபவம்) நமக்குப் பலகஷ்டங்களைக் கொடுப்பவராயும், வீண்பணச்செலவை உண்டாக்குபவராயுமிருக்கிருர்.

வள்ளுவர் வாய்மொழி

5-வது இல்லற தருமம்

(1) இல்லறஞ் செய்பவன், பிரம்மசாரி· வானப்பிரஸ்தன், சன்னியாசி ஆகிய மூன்று ஆச்சிரமிகளுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து, அவர்களை ஒழுக்கங்களினின்று வழுவாமல், காப்பதனுல் அவர்களுக்குத் துணைவனுகிருன்.

(2) உறவினரால் விடப்பட்டவர்களுக்கும், தரித்திரர்களுக்கும், கதியற்றவர்களாய் வந்து இறந்தவர்களுக்கும், இல்லறத்தவனே துணைவன்.

(3) இல்வாழ்வானுக்குச் சிறந்த தர்மம் என்னவென்றால் பிதுருக்கள், தேவதைகள், விருந்தினர்கள்,பந்துக்கள், தன் குடும்பம், ஆகிய ஐந்து இடங்களிலும் செய்யவேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்தலேயாம்.

(4) இல்லறத்தான், பாவத்திற்கு அஞ்சிப் பொருளைச் சம்பாதிக்க வேண்டும். அப்பொருளை மேற்சொல்லியவர்களுக்குப் பிரித்துக்கொடுத்துப் பிறகே தான் உண்ணவேண்டும். அவ்வாறு செய்தால் அவன் சந்ததிவிருத்தியாகும். பொருளும் அழியாது.

(5) இல்வாழ்க்கையின் தன்மை, மனைவிமேல் அன்பாயிருத்தல்; இல்வாழ்க்கையின் பயன்,பிறருக்குக் கொடுத்தல்.

(6) ஒருவன் முறைப்படி இல்லறஞ்செய்வானாகில், அவனுக்கு வேறு அறங்களால் அடையக்கூடியது ஒன்றுமில்லை.

(7) இல்லறத்தை விதிப்படி செய்பவன் துறவடைய முயல்கிறவர்கள் எல்லாரினும் மேம்பட்டவன்.

(8) தவஞ்செய்பவர்களுக்கு உண்டாகும் பசி முதலிய துன்பங்களை நீக்கித் தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொள்வதால் துறவிகளுடைய பொறுமையினும், இல்வாழ்வானுடைய பொறுமை சிறந்தது.

(9) நூல்களால் அறம் என்று சிறப்பித்துக் கூறப்பட்டது இல்லறமே; துறவறமும் பிறராற்பழிக்கப்படும் தீக்குணங்கள் இலதாயின் இல்லறத்தைப்போல் நல்லதே.

(10) முறைதவறாமல் இல்லறஞ் செய்துவாழ்பவன் மறுமையிற் தேவகதியைப் பெறுவான், அன்றியும் இவ்வுலகத்திலேயே தேவரைப்போலக் கொண்டாடப் படுவான்.

6-வது நற்குணமுள்ள மனைவி.

(1) இல்லறஞ்செய்வதற்கேற்ற நற்குண நற்செய்கைகளையுடையவளும் கணவனுடைய வரும்படிக்குத்தக்க செலவுசெய்பவளுமே நல்லமனைவியாவாள்.

(2) ஒருவனுடைய இல்வாழ்க்கையானது செல்வத்தால் எவ்வளவு பெருமைபொருந்தியதாயிருப்பினும், அவன்மனைவி நல்லவளா யில்லாவிட்டால் ஒருபயனும் உண்டாகாதாகையால் சிறப்புடைய தன்று.

(3) ஒருவனுக்கு மனைவி நல்லவளானல் அவனிடம் இல்லாதது ஒன்றுமில்லை. மனைவி கெட்டவளானல் இருப்பதும் ஒன்றுமில்லை.

(4) ஒருவன் அடையத்தகுந்த சிறந்த பொருள்களுள் நன்மனைவியைக் காட்டிலும் மேம்பட்ட பொருள் வேறொன்றுமில்லை.

(5) வேறு தெய்வங்களைத் தொழாமல் தன் தெய்வமாகிய புருஷனை வழிபடுபவள் பெய்யென்று சொல்லும்பொழுது மழை பெய்யும்.

(6) கற்புநிலை தவறாமல் தன்னைக்காத்துக் கணவனைப் பல விதத்தாலும் உபசரித்து கணவன் தான் என்னு மிருவரிடத்திலுமுள்ள புகழ் நீங்காமல் காப்பாற்றி கணவனது சொல்லைக் கடவாமல் போற்றி எதிலும் மறத்தவில்லாதவளே நன்மனைவியாவாள்.

(7) புருஷர்கள், தம் மனைவியரை மதில்களாலும் வாசற்காப்போர்களாலும் காவல்செய்வது ஒரு பயனையுந்தராது. மனைவியர் தம் நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்துதலாகிய காவலே சிறந்த காவலாகும்.

(8) தம் கணவனை வணங்கி உபசரித்தபெண் தேவலோகத்தில் தேவர்களால் மேன்மைசெய்யப்படுவாள்.

(9) புகழைவிரும்பும் மனைவியில்லாதவனுக்கு எதிரிகளின் முன் கம்பீரமான நடையில்லை.

(10) ஒருவனுக்கு நன்மையென்னவென்றால் மனையாளுடைய நற்குண நற்செய்கைகளாம்; அந்நற்குணங்களும் நற்செய்கைகளும் பிரகாசிக்கும்படியான ஆபரணம் நல்ல புத்திரரைப் பெறுதலாம்.

7-வது நல்ல பிள்ளைகளைப்பெறுதல்

(1) ஒருவன் அடையத்தகுந்த பாக்கியங்களுள் புத்திசாலிளான பிள்ளைகளைப் பெறுவதே சிறந்த பாக்கியமாகும்; மற்றவைகளெல்லாம், இவ்வளவு மதிப்புக் குரியனவல்ல.

(2) ஒரு வம்சத்தில் ஒருவன் நல்லபிள்ளைகளைப்பெற்றால் அவ்வம்சத்தில் முன்னேழு பின்னேழு நடுவேழு என்னும் இருபத்தொருதலை முறையாரையும் தீவினைகள் தொடரமாட்டா.

(3) மக்கள் சம்பாதித்த பொருள் தந்தையின் பொருளே யாகும்; ஏனெனில் தந்தையின்பாவம் ஒழியும்பொருட்டு, பிள்ளைகள்செய்யும் தான தருமங்களுக்குப் பிள்ளைகள் சம்பாதித்த பொருள் உதவுவதனால் பிள்ளைகளுடைய பொருள் தகப்பனுடையதேயாகும்.

(4) ஒருவனுக்கு அவன் குழந்தைகளின் கையால் துழாவப்பட்டசோறு அமிர்தத்தினும் இனிமையாயிருக்கும்.

(5) ஒருவனுக்குத் தன்பிள்ளைகளின் உடம்பைத் தழுவுவது தன் உடலுக்கு இன்பத்தைக்கொடுக்கும், அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டல் காதுக்கு இன்பத்தைக்கொடுக்கும்.

(6) குழந்தைகளின் மழலைச்சொல்லைக்கேட்கும் பாக்கியமில்லாதவர்கள், அதாவது பிள்ளையில்லாதவர்களே புள்ளாங்குழலோசை இனிமையானதென்றும் வீணையின் இசை இனிமையானதென்றும் கூறுவர்.

(7) தகப்பன் மகனுக்குச்செய்யும் உபகாரம் அவனை மிகுந்த கல்வியுடையவனாகச் செய்தலேயாம்.

(8) தமது புத்திரர் தம்மைக்காட்டிலும் அறிவுடையவராயிருப்பது உலகத்தில் எல்லாருக்கும் இனிமையைத்தரும்.

(9) தாய் பிள்ளையைப்பெற்றபொழுது அடையும் சந்தோஷத்தைக்காட்டிலும் அவன் கல்வியறிவுகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர்களிடத்திலிருந்து கேள்விப்பட்டபொழுது அதிக சந்தோஷத்தை யடைவாள்.

(10) மகன் தகப்பனுக்குச்செய்யும் உபகாரமாவது தன்னுடைய புத்தி, ஒழுக்கம் முதலியவைகளைக் கண்டவர்கள், இவனைப் பெறுவதற்கு இவன் தகப்பன் என்னதவஞ் செய்தானோ என்று சொல்லும்படி நடந்துகொள்ளுதலாம்.

8-வது அன்புள்ளவனாதல்

(1) தாம் அன்புவைத்திருப்பவர்களுக்கு ஒரு துன்பமுண்டானால், அன்புடையவர்களுடைய கண்களிலிருந்து வெளியாகிற

நீரே அவர்களுடைய அன்பை வெளிப்படுத்தும். ஆகையால் அன்பைப் பிறர் அறியாமல் மறைத்து அடைத்துவைக்கும் கருவி ஒன்றுமில்லை.

(2) அன்பில்லாதவர்கள் எல்லாப்பொருள்களையும் தமக்கே வைத்துக்கொள்ளுவார்கள். அன்புடையவர்கள் தம்பொருள்கள் எல்லாவற்றையும் பிறர்க்கு உதவுவதோடு தம் உடம்பைக்கூட பிறருக்கு உதவி விடுவார்கள்.

(3) மனிதவுடம்பு ஏற்பட்டது முன்ஜென்மங்களில் அன்பு செய்ததனுல்தான் என்றும் இச்சன்மத்திலும் அன்பு செய்வதற்காகவேயென்றும் பெரியோர் கூறுவர்.

(4) ஒருவனுக்கு அன்பானது எல்லாரிடத்திலும் விருப்பத்தை யுண்டாக்கும். அவ்விருப்பமானது பகைவரேயில்லாமல் எல்லாரையும் நண்பராக்கும்.

(5) இவ்வுலகத்திலும் இன்பமனுபவித்து மோட்சத்தையும் அடைதல் அன்பு செய்வதால்தான் உண்டாகும்.

(6) அன்பானது தருமத்துக்குமாத்திரமே உதவியாவது என்று அறியாதவர்கள் சொல்லுவார்கள். அதருமத்தை ஒழிப்பதற்கும் அன்பே உதவியாவதால், அன்பானது தர்மம் அதர்மம் இரண்டுக்கும் உதவியாகிறது.

(7) புழுவை வெயிலானது எப்படிச் சுட்டெரிக்குமோ அப்படி அன்பில்லாதவனை தருமதேவதை அழிக்கும்.

(8) வறண்ட பாலைவனத்திலுள்ள உலர்ந்த மரமானது துளிர்த்துக்கிளம்புதல் ஒருபோதும் இல்லை. அதுபோல அன்பில்லாதவனும் உலகத்தில் விருத்திபடைந்து வாழமுடியாது.

(9) மனத்தில் அன்பில்லாதவர்களுக்கு இடம்பொருள் ஏவல் முதலிய வெளிப்பொருள்களால் ஒரு பிரயோசனமு மில்லை.

(10) அன்புள்ளவர்களே உயிருடையவர்கள் எனப்படுவார்கள். அன்பில்லாதவர்கள் பிணமெனப்படுவார்கள்.

ஓர் உத்தம புருஷரின் உண்மைமொழிகள்

1. ஆயிரக்கணக்கான வார்த்தைகளினால் ஆத்மதிருப்தியுண்டாகின்றதில்லை; உள்ளும்புறமும் ஒன்றாயுள்ள ஒழுக்கமும் உண்மையும் பொறுமையுமே ஆத்மதிருப்தியை அளிக்கவல்லன.

2. நீ எவ்வளவுதான் அறிந்திருந்தபோதிலும் இன்னும் நீயறியாதவை எவ்வளவோ யிருக்குமென்று அறிந்துகொள்.

3. எவன் எல்லாவஸ்துக்களையும் ஒன்றாகப் பார்க்கின்றானோ, எவன் ஒன்றில் எல்லா வஸ்துக்களையும் பார்க்கின்றானோ, எவன் ஒன்றை எல்லாவஸ்துக்களிலும் பார்க்கிறானோ, அவனே உபசாந்தியடைந்த புருஷன்.

4. ஏ, ஈஸ்வரா, ஏன் இந்த ஜீவகோடிகள் இப்படிக் கத்துகின்றார்கள்? நீ என்னுள்ளேயே ஒன்றியிருந்துகொண்டு அதிரகஸ்யமாக என்னிடத்துக் கூறுகின்ற அமிருத மொழியைக்கேட்கவொட்டாது ஏன் இவர்கள் இப்படிப் பெருங்கூச்சலிடுகின்றார்கள்? ஏ, படிப்புப்பித்தேறிய பாதகர்களே, ஏ, பேரிடிமுழக்கம் செய்து பிதற்றுகின்ற பித்தர்களே, சற்றுவாய் மூடுங்கள்; என் உயிருக்குயிரான உத்தமன் பேசுகின்றான், நான் கேட்கட்டும்.

5. தாழ்ந்த பள்ளங்களிலேதான் தண்ணீர் தங்கும்; அதுபோல தாழ்மையுள்ளவர்களிடத்தில்தான் ஜகந்நாதனுடைய தண்ணருள் தங்கும்.

6. நாம் நமது கைகளினால் உலகவிஷயங்களைப் பிடித்துக்கொண்டிருக்கும்வரையில், ஈஸ்வரனையடைய முடியாது. பிடிப்புக்களை விட்டுவிட்டு கைகளை உதறி விரித்துவிட்டாலே கடவுளையடையலாம்.

7. அகங்கார, மமகாரமுள்ளவர்கள் ஒருபொழுதும் ஆநந்தமடையமுடியாது. அடங்கிய மனத்தினரே ஆநந்தத்திற்குப் பாத்திரர்.

8. ஆட்சிசெய்வதினும் அடங்கியிருத்தல் நலம். பலவந்தக் கட்டுப்பாடுகட்கு அடங்கியிருப்பவர்களே அதிருப்தி மிகுந்திருப்பார்கள். தர்மத்திற்கு அடங்கியிருப்பவர்கள் திருப்தி யடைந்தவர்கள்.

9. எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களையே உடைத்தாயிரு; உயர்ந்த விஷயங்களையே பேசு; சாதாரண ஜனங்களுடன் சகவாசம்செய்.

10. உனதுவாய் எப்பொழுதும் மூடியிருக்கட்டும்; உன்து காதுகள் எப்பொழுதும் திறந்திருக்கட்டும். பேசும்பொழுது பிரசங்கம் செய்யாதே, ஒரு சிலவார்த்தைகளையே உரை; ஆனால் எத்தனைபேர் சொன்னாலும் எவ்வளவு சொன்னாலும் எல்லாவற்றையும் நன்றாகக் கேட்டுக்கொள்.

11. நீ உத்தமபதவியை யடையவேண்டுமாயின், உலகக்கட்டுக்களினின்றும் தப்பித்துக்கொண்டு ஓடிவிடு. இல்லையேல் மேன்மேலும் பலமான கட்டுக்களால் நீ கட்டப்படுவாய்.

12. பிறர்காரியங்களைப்பற்றி நாம்பேசத்தலைப்படாமல் நமது காரியங்களை மாத்திரம் நாம் சரிவரக் கவனித்துக்கொண்டால், நமக்கு இத்துணை மனத்துன்பம் உண்டாகாது.

13. ஏ, ஈஸ்வரா, நீ எவரும் அறியாமல்வந்து ஏழைகளுடைய ஹிருதயத்தைக் கொள்ளை கொள்கின்ற கள்வன்; உன்னை உடனே பிடித்துச் சிறையிலிட்டுவிடவேண்டுமென்று சாதுஜன அரசாங்கத்திலிருந்து உத்தரவு ஆய்விட்டது. எத்தனையோ தீரர்கள் அவ்வப்பொழுது உன்னைப்பிடித்துச் சிறையிலிட்டும், நீ அவர்களை ஏமாற்றி தப்பித்துக்கொண்டாய்! உன் திருட்டுத்தனம் என்னிடம் பலிக்காது. உன்னைப்பிடித்து என்னகத்துள் அடைத்து வைத்துக்கொண்டு ஏழைகளுடைய துன்பத்தை நிவிர்த்திசெய்து, தீராதி தீரன் எனப்பெயர் பெறத்துணிந்தேன்.

14. ஈஸ்வரா, சீச்சீ! நீ ஒருவிளையாட்டுப்பிள்ளை. நீ மனிதனுக்குத் துன்பத்தையும் கொடுக்கிறாய், இன்பத்தையும் கொடுக்கிறாய். குழந்தையின் தொடையையும் கிள்ளிவிடுகிறாய், தொட்டிலையும் ஆட்டுகிறாய்.

15. மூளைக்கு வேலைகொடுக்கும் முயற்சியினும் ஹிருதயத்தை நெகிழ்ச்செய்யும் முயற்சி மிகமிகச் சிறந்தது. அறிவானது மனிதனைச் சின்னாபின்னப்படுத்திச் சிதறவடித்து பல பல துண்டுகளாகப் பகுத்துவிடுகிறது. அன்பு எல்லாவற்றையும் கரைத்துக் கரைத்து உருக்கி ஒன்றாக்கிவிடுகிறது. வேற்றுமை துக்கத்திற்குக் காரணமாயிருத்தலால், வேற்றுமைக்குக் காரணமான அறிவும் துக்கத்திற்குக் காரணமாயிருக்கின்றது. ஒற்றுமைசுகத்திற்குக் காரணமாயிருத்தலால், ஒற்றுமைக்குக் காரணமாகிய அன்பும் சுகத்திற்குக் காரணமாயிருக்கின்றது.

16. நேரிடுந்துன்பங்களையெல்லாம் மனம் சலியாது சகிக்கும் சமர்த்து உடையவன் எவனோ அவனே மனச்சாந்தி பெற்றவன். பொறுமையுடன்கூடிய சகன சக்தியே தபஸ் எனப்படும்.

சிசுப்பருவம்

ஒரு மனிதனுடைய வாழ்நாட்களுக்கு அஸ்திவாரமாயுள்ளது அவனுடைய சிசுப்பருவமாகும். குழந்தையின் இரண்டாவது வயது முடியும்வரையில் அக்காலம் சிசுப்பருவமெனப்படும். இக்காலத்தில் பாதுகாக்கப்படவேண்டிய முறைப்படி பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்ற குழந்தை தனது பிற்காலத்தில் சுகசரீரத்துடன் வாழ்வானென்பதில் சந்தேகமில்லை ஆதலால் இப்பருவத்தைப்பற்றி சிறிது ஆராயப்புகுவது வீண்வேலையாகாது.

இப்பருவத்தில் குழந்தைகளுக்கு புத்தி சக்தி கிடையாது; ஆதலால் தனது சரீரபீடையைத் தெரிவிக்க முடியாது தவிக்கும். துன்பம் ஒன்றுதான் குழந்தையின் முகத்திலிருந்து வெளிப்படும். சொற்பத்துன்பம் நேரிட்டாலும் அதைப் பொறுக்கமுடியாது, குழந்தையழும். குழந்தை பிறந்தவுடன் அதன் தாயாரினுடைய ஸ்தன்னியத்தில் பால்தானே சுரக்கின்றதினால், சிருஷ்டி நீதியே குழந்தைக்கேற்றபால் தாயாரினுடையதுதான் என்று விதிக்கின்றதுபோல இருக்கின்றது. பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தாயாருக்கே குழந்தையின்மீது உண்மையான அன்பு இருக்குமாதலால், தாயாருடைய பாலே குழந்தையை சுகமாக வளர்ப்பதற்கு ஏற்றது. ஆகாரத்தில் ஏற்படும் மாறுதல்களைக்குழந்தைகளிடத்தில் சட்டென்று காணலாம். திடீரென்று தாயாருக்குக் கோபமுண்டாகிவிட்டாலும், விசனமுண்டாகிவிட்டாலும், சந்தோஷமுண்டாகிவிட்டாலும், குழந்தையினிடத்தில் கண்டுவிடலாம். திடீரென்று உண்டாகின்ற கோபம், விசனம், சந்தோஷம் முதலியவை தாயாருடைய மனத்தைக் கலைத்துவிடவே, குழந்தையினிடத்தில் அன்பே சொரூபமாயிருந்த மனமானது சிதறி விகற்பமடைந்து முலைப்பாலின் வழியாகக் குழந்தையினிடத்துச் செல்லவே, ஒரு முகப்பட்ட மனத்திலிருந்து உண்டான சாத்வீக ஆகாரமான ஸ்தன்னியக்ஷீரத்தை இதுகாறும் ஜீரணித்துக்கொண்டிருந்த குழந்தையின் குடல் இப்பொழுது விகற்பமடைந்த மனநிலைமையிலிருந்து உண்டான பாலை ஜீரணிப்பதற்கு சக்தியற்றதாகிறது. ஆதலால் சிசுக்களுக்கு அடிக்கடி மலபந்தம், கழிச்சல் முதலிய வயிற்றுநோவுகள் உண்டாகின்றன குழந்தைகளுக்கு உண்டாகும் வியாதிகளில் பெரும்பான்மையும் வயிற்றைப்பற்றியவையேயாகும். ஆகையால் தாயார் எப்பொழுதும் கோபம், விச

னம் முதலிய லட்சணங்களுக்கு இடங்கொடாமல் மனத்தை சமாதானமாக நிறுத்திக்கொண்டு சுகமாயிருக்கவேண்டியது. வேறு ஸ்திரீகளைக் கொண்டு பால்கொடுக்கச்செய்வது குழந்தைகளுக்குக் கெடுதலேயாகும். உண்மையில் குழந்தையின் க்ஷேமத்தைக் கருதிய தாய்தான் மனம் மாறுதலுக்கு இடம்கொடாதிருப்பாள் அல்லது இடம்கொடாதிருக்க முயற்சிப்பாளேயொழிய, வேறு ஸ்திரீகளுக்கு அவ்வளவு சிரத்தையிருக்குமா? ஆகையால் தாயின்பாலே உத்தமம்; வேறு ஸ்திரீகளின் பால் மத்திமம்; ஆடுமாடு முதலியவற்றின் பால் அதமம். மாதாவின் கர்ப்பத்திலிருந்து குழந்தை வெளியாகும் வரையில், குழந்தையின் சுவாசப்பை நேருக்கு நேர ஆகாயத்துடன் சம்பந்தப்பட்டதில்லையாதலால் சுவாசப்பையில் சீச்கிரம் வியாதிபற்றுதற்குக்காரணம் உண்டு. இது போலவே குழந்தை கர்ப்பத்திலிருந்து வெளிப்படும் வரையில் குடலின் மூலமாக அல்லாமல் வேறு விதமாக ஆகாரத்தை எடுத்துக்கொண்டிருந்ததினால், ஆகாரத்தை ஜீரணம்செய்யும் வழக்கம் அதுகாறும் குடலுக்கு இல்லை. ஆதலால் ஆகாரப்பாகுபாடுகளினால் குடலும் அடிக்கடி வியாதியினால் பீடிக்கப்படும். ஆகையால் ஆகாரமானது மிகமிக மிருதுவாயிருக்கவேண்டியது. இக்காரணங்களால்தான் குழந்தைகளுக்கு உண்டாகும் வியாதிகள் பெரும்பான்மையும் குடலைப்பற்றியவைபாகவோ அல்லது ஹிருதயத்தைப்பற்றியவைபாகவோ இருக்கின்றன. பின்னர்தான் சிரசு நோய்களால் பீடிக்கப்படுகின்றது. சிசுக்களுக்கு ஔஷதம் கொடுக்கவேண்டி நேரிட்டால், மிகமிக மிருதுவான, ஒருசிறிதும் வீர்யமில்லாத ஔஷதங்களையே-அதுவும் ஜாக்கிரதையாக-கொடுக்கவேண்டும். சிசுக்கள் எப்பொழுதும் ஈரமில்லாத அறையில் தெளிந்த காற்று நன்றாக உலாவும்படியான இடத்தில் வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் வெயிலிலும் பெருங்காற்றிலும் சிசுக்களைக்கொண்டுவரலாகாது. சிசுவின் சரீரத்தை தினந்தோறும் வெது வெதுவென்றுள்ள வெந்நீர்விட்டுக் குளிப்பாட்டி, நன்றாக உலர்ந்த உடைகளால் உடுப்பிக்கவேண்டும்: ஆனால் தலையை ஸ்நானம் செய்விக்கக்கூடாது. சிசுவை நன்றாகவளர்ப்பிப்பதில் மிகஜாக்கிரதையுடன் நடந்துவந்தாலே இந்த சிசுபிற்காலத்தில் பெரிதாக வளர்ந்து சுகசரீரத்துடன் துன்பம் எய்தாது நன்றாகவாழ்தற்கு இடம் உண்டாகும்.

நமது நாட்டுவைசியர்களின் கடமை.

(ஒரு பழயபத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

பகவத்கீதையிலே வைசியர்களுக்கு மூன்றுவிதமான கடமைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை, "கிருஷி கோரக்ஷம் வாணிஜ்யம்"—கிருஷி, பசுக்காப்பு, வாணிபம் என்பனவாம். இம்மூன்றும் இந்நாட்டிலே எந்தநிலைமைக்கு வந்திருக்கின்றனவென்பதை முறையே ஆராய்ச்சிசெய்வோம். கிருஷியின் நிலை எப்படியிருக்கிறது? இந்நாட்டிலே வருஷந்தோறும் லட்சக்கணக்கான கிராமக்கிருஷிக்காரர்கள் சோறில்லாமல் மடிகிறார்களென்ற செய்தி எல்லோருக்கும் தெரிந்ததேயாகும். ஆனால் இந்தகிருஷிகர்கள் பாடுபட்டதின்பேரில் அறுவடையாகும் தானியங்கள் அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. வில்லியம் டிக்பி என்பவர் கணக்குப் போட்டிருப்பதில் 1780-ம் வருஷம் முதல் 1900-ம் வருஷம் வரை 120 வருஷங்களில் உலகம் முழுதிலும் நடந்த யுத்தங்கள் எல்லாவற்றிலும் இறந்துபோன ஜனங்களின் மொத்தத்தொகை ஐம்பதுலட்சம் பேராகிறது. ஆனால் நமது நாட்டில் 10 வருஷங்களுக்குள்ளாக உண்ணச்சோறில்லாமல்மேற்கண்டதொகையினும் அதிகம்பேர் இறக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. நமது தேசத்தின் இத்தகைய கிருஷிநிலைக்கு வைசியர்களே பொறுப்பாளிகள்; தேசத்தின் செல்வத்தை வெளிநாடுகளுக்கு அனுப்புவோரும் அதற்குத்துணைபுரிவோரும் இந்தநிலைமைக்கு உத்தரவாதிகளாவார்கள். வைசியர்களின் இரண்டாவது கடமை கோரக்ஷை, அதாவது, பசுக்காப்பு. விவசாயத்தையே முக்கியவிருத்தியாகக் கொண்ட நாட்டிற்குப் பசுக்கள் எத்தனை பிரதானமானவையென்பதை விளக்கிச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இதையோசித்தே நமது முன்னோர்கள் பசுமாமிசத்தை மாத்திரம் யாருமே தீண்டலாகாதென்று ஏற்பாடுசெய்து வைத்திருந்தார்கள். அந்நிய அதிகாரம் ஏற்பட்டபின் பசுமாமிச பட்சணம் கூடாதென்ற நிபந்தனையைப்பாதுகாக்க முடியாது போய்விட்டது.

நாட்டிலே பசுக்கள் நாளுக்குநாள் தொகையிலே குறைவுபட்டுவருகின்றன; தவிர, நோய்ப்பற்றியும் மெலிந்தும் க்ஷீணமடைகின்றன. நல்லஜீவனம்கிடைப்பதில்லை. பால்வில்லை, நெய்யில்லை ஏறிப்போய்க் கிடக்கிறது. ஒவ்வொரு கிரகஸ்தன் வீட்டிலும் லக்ஷ்மியைப்போல ஒரு பசுமாடுவைத்திருப்பது என்ற சம்பிர

தாயம் மறைந்துபோய் விட்டது மறுபடியும் பசுக்கள் வளர்த்துப் பரிபாலனம் செய்வதை வைசியர்கள் பெருந் தர்மமாகக்கொள்ள வேண்டும்.

பகவத்கீதையிலே வைசியர்களுக்குச் சொல்லப்பட்ட மூன்றாவது கடமைவாணிகம் உண்மையான வாணிகம் எத்தன்மையுடையதாயிருக்கவேண்டுமென்றால் அந்நியநாட்டிலிருந்து செல்வம் நமது நாட்டுள்வந்து சேர்ந்து நமது நாட்டுச்செல்வம் விருத்தியடையும்படியாக இருக்கவேண்டும். இன்று நம்மவருள் வைசியர்களென்று சொல்லப்படுவோர்களில் அநேகர் அந்நியதேச வர்த்தகர்களின் கைக்கீழ்த்தரகர்களாகவும் காரியஸ்தர்களாகவும் இருக்கிறார்களேயல்லாமல் தாமாகவே நல்லவியாபாரங்களில் சிந்தைசெலுத்தித் தமக்கும் நாட்டுக்கும் நன்மையுண்டாகும்படி வாணிபம் செய்வோரை இக்காலத்தில் இந்நாட்டிலே காண்பது அரிதாகிவிட்டது. மற்ற நாட்டுவைசியர்கள் எவ்வளவு புத்தியுடன் வாணிகம்செய்கிறார்கள், பாருங்கள். நமது நாட்டை அரசாட்சிசெய்யும் "துரை"கள் ஆதியில் இங்கு வாணிகம் செய்ய வந்த வைசியர்களே. நமதுவைசியர்களும் இப்படியிருக்கக் கூடாதா? இந்த நாட்டின் பொருள்நிலையைச் செம்மைப்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியம்தான். ஆனால் நமது வைசியர்களெல்லோரும் உண்மையான ஆரியர்களாகி, பொருள் தேடுவது தங்களுடைய நன்மைக்கு மாத்திரமேயன்று தேசப் பொதுஜன நன்மைக்கென்பதையறிந்துகொண்டு அந்நியதேச வியாபாரிகளின் கீழ்பொம்மைகளாகயிருப்பதை நீக்கிவிட்டு, புத்தியுடனும் தேசபக்தியுடனும் வேலைசெய்வார்களானால் நமக்கு க்ஷேமமுண்டு; அவர்களுக்கும் க்ஷேமமுண்டு. அங்ஙனமில்லாமல் அந்நியவியாபாரிகளின் கீழ்காரியஸ்தர்களாயிருந்து நாட்டுத்திரவியத்தை நாசம் செய்தேனும் தாம்சுகமாகஜீவனம் செய்யவேண்டுமென்று நினைப்பவர்கள் "தமது சொந்தத்தின் பொருட்டாகமட்டுமே சமைத்துண்பவர்கள் பெரும்பாவத்தையுண்கிறார்கள்" என்று கீதையிலே பகவான் சொல்லியிருப்பதற்கு லட்சியமாகிறார்கள். இவர்கள்பாதகத்தையுண்பவர்கள். இகத்திலும் பரத்திலும் இவர்களுக்கு நன்மையில்லை.

சந்தாநேயர்களுக்கு அறிக்கை.

இப்பகுதியுடன் நமது "ஞானபாநு" வுக்கு வயது மூன்று நிறைந்துவிட்டது. அடுத்த௴த்திய சஞ்சிகை தொகுதி-4, பகுதி-1 ஆக வெளிவரும். அதற்குள் சந்தாதீர்ந்துவிட்ட சந்தாதாரர்கள் தங்களுடைய மறுவருடத்திய சந்தாத் தொகையை தபால் மூலமாக அனுப்பிக்கொடுக்கும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். அப்படித் தபால் மூலமாகவனுப்பத்தவறிவிடுகிற அல்லது மறந்துவிடுகிற சகோதரர்கட்கு அடுத்த௴த்துச் சஞ்சிகை அவர்கள் தபாலில் பணம் கட்டிப்பெற்றுக்கொள்ளும்படி (வி. பி. யில்) அனுப்பப்படும். சந்தாதாரர்கள் தயைசெய்து பணங்கட்டி (வி. பி. யில்) பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு முன்போலவே பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். "ஞானபாநு" வின் க்ஷேமத்தை நாடியிருக்கும் சந்தாதாரர்களுக்கும் சந்தாதாரர்களின் க்ஷேமத்தை நாடியுழைக்கும் "ஞானபாநு" வுக்கும் எல்லாம் வல்ல ஈசன் கிருபை பாலிப்பாராக.

பத்திரிகை வரவு.

விவேகோதயம்:—இப்பெயர்பூண்ட பத்திரிகையொன்று மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்றும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. பத்திராதிபர் நெடுநாட்களாகத் தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும் தேசத்தின் முன்னேற்றத்தையும்கருதிப் பாடுபட்டுவரும் பிரஹ்ம ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணய்யரவர்களாவார். காகிதப்பஞ்சத்தினால் பீடிக்கப்பட்டு பத்திராதிபர்களும் பதிப்பாசிரியர்களும் திண்டாடுகின்ற இக்காலத்தில், பழய பத்திரிகைகளிற் பல நின்றும் சில பக்கங்களையும் அளவையும் குறைத்தும் வருகின்ற இக்காலத்தில், மிகக்குறைந்த சந்தாவுக்கு மிகமிக அரிய விஷயங்களையடக்கியுள்ள விவேகோதயம் கொடுபடுவது ஆசிரியருடைய பொதுநலநோக்கத்தையும் மனத்துணிவையும் எடுத்துக் காட்டுகின்றது. வருஷச்சந்தா ரூ 1-8-0; வெளிநாடுகளுக்கு ரூ 2-4-0. இப்பொழுது நம்முன் இருக்கும் முதலாவது பகுதியில் மகா வித்வான் அரசஞ் சண்முகனாருடைய "வள்ளுவர் நேரிசை" யென்னும் பெயரிய வெண்பாக்கள் சிறந்து விளங்குகின்றன. இன்னும் "இரவல்மணிகள்," "சாணக்கிய சாகஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம்" முதலியவை நன்றாயிருக்கின்றன. ஆனால் ஒன்று நாம் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். பத்திரிகையின்மேல் பக்கத்திலும் தலைப்பக்கத்திலும் ஆங்கில வருடமும் ஆங்கில மாதமும் குறிக்கப்பட்டிருக்கின்றனவேயொழிய, தமிழ் வருடமும் தமிழ் மாதமும் மறந்துவிடப்பட்டன. அடுத்தமாதம்முதல் பத்திராதிபர் இதைக் கவனிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சமாச்சாரக் குறிப்புகள்

நமது ராஜப்பிரதிநிதியாகிய ஹார்டிஞ்ஜ் பிரபு அவர்கள் இம்மாதத்துடன் தமது உத்தியோகத்தினின்றும் நீங்கி விடுகிறார். இந்தியாவுக்கு இவர்போன்ற அதிபதிகளே இப்பொழுது அவசியமாயிருத்தலால், இவர் இன்னும் சிலகாலம் இங்கு இருக்கமுடியுமானால், மிகநன்றாயிருக்கும். இவர் தமது உத்தியோக காலத்தில் நமக்கு அளவற்ற நன்மைகளைச் செய்திருக்கிறாரென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்காக இவர் பரிந்துபேசிய பேச்சுக்கள் இவருடைய நற்செயல்கள் எல்லாவற்றினும் மேம்பட்டு நிற்கின்றன. ஆனால் இவருடைய உத்தியோக காலத்தில்தான் சதியாலோசனைச்சட்டம், நீதிஸ்தல நிந்தனைச்சட்டம், இந்தியப்பாதுகாப்புச்சட்டம் முதலிய அநாவசியமான பல சட்டங்கள் ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதைப்பற்றி மிகவும் விசனிக்கிறோம். ஆனால் இச்சட்டங்களுக்காக நாம் ஹார்டிஞ்ஜ் பிரபுவைக் குற்றம்கூறுவதற்கில்லையென்றும் அரசாங்க முறைமையையே குற்றம் கூறவேண்டியிருக்கின்றதென்றும் ஹார்டிஞ்ஜ் பிரபு தமது இஷ்டம்போல் நடத்தவிடப்பட்டிருப்பாராயின் இச்சட்டங்கள் சட்டங்களாயிருக்கமாட்டாவென்றும் நினைக்கிறோம். இவர் நம்முடன் இருந்த இந்த ஐந்துவருஷங்களுக்குள்ளாக, இவருக்குச் சகிக்கவொண்ணாத விபத்துக்களும் துக்கமும் ஏற்பட்டன. அவற்றையெல்லாம் மிகுந்தபொறுமையுடன் சகித்துக்கொண்டு இவர்தமது ராஜதந்திர சாமர்த்தியங்களையெல்லாம் காட்டி ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் அந்நியோந்நியம் நல்லெண்ணங்களை உண்டுபண்ண முயற்சி செய்தார். இவர் நமக்குச்செய்த நன்மைகளுக்கெல்லாம் வந்தனம்கூறி, இப்பொழுது இவருக்குச் சந்தோஷமாக விடையளிக்கின்றோம். இவர் தமது ஸ்வதேசம்போயும் நம்மை மறக்கமாட்டாரென்றும் எங்கிருந்தாலும் தம்மால் முடியுமானவிதங்களிலெல்லாம் நமக்கு நன்மையைச் செய்துகொண்டேயிருப்பாரென்றும் நம்புகிறோம்.

* * *

செம்ஸ்போர்ட் பிரபு என்பவர் அடுத்தமீ முதல் நமக்கு ராஜப்பிரதிநிதி. இவருடைய பெயர் கேள்விப்பட்டவுடனே, இந்தியப்பத்திரிகைகளெல்லாம் தமது வெறுப்பைக்காட்டி முறுமுறுத்தன; ஆனால் சிலதினங்களுக்குள்ளாக திருப்தியையும்காட்ட ஆரம்

பித்துவிட்டன. இவரைவெறுக்கும்படியான குற்றங்கள் இவரிடத்தில் இருப்பதாக நமக்குத்தோன்றவில்லை. ஆனால் இவரை இப்பொழுதே மிகமிகப்புகழும்படியாக ஒன்றும் இருப்பதாகவும்நமக்குத்தோன்றவில்லை. ஆதலால் இவருடைய ராஜ்யபாரம் பொது ஜனங்களுக்கு ஹிதத்தையே செய்யுமென்று நம்பி, ஈஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம். இந்தியாவானது புதிய உயிர்பெற்று உலகில் முன்னேற்றத்தையடையக்கருதிப் பாடுபட்டுவரும் இச்சமயத்தில் கைகொடுத்துதவும் துணைவன்போல, செம்ஸ்போர்ட் பிரபு இருப்பாரென்று எதிர்பார்த்து, அவருக்கு நாம் நல்வரவு கூறுகின்றோம்.

* * *

சென்னைமாநகரமானது ஒரு புண்ணியநகரம்போல நமக்குத் தோன்றுகின்றது; ஏனென்றால், இக்காலத்தில் இந்தியாதேசம் மேன்மையுறுதற்கு வேண்டிய சில அசாதாரணமான, அரிய பிரசங்கங்கள் இங்கேதான் செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளுடைய இந்தியப் பிரசங்கங்களுள் சென்னைமாநகரப்பிரசங்கங்களே சிறந்தனவென்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீ விபினசந்திரபாலருடைய அருமையான தேசாபிமானப் பிரசங்கங்கள் இந்நகரில்தான் செய்யப்பட்டன. இப்பொழுது நம்மிடத்தினின்றும் நீங்கிச்செல்கின்ற ராஜப்பிரதிநிதியவர்களாகிய ஹார்டிஞ்ஜ் பிரபுவின் தென்னாப்பிரிக்கா இந்தியரைப்பற்றியுள்ளதீரப்பிரசங்கமும் இங்குதான் நிகழ்ந்தது. ஆதலால் சென்னைமாநகர் விசேஷம் பெற்றதல்லவா?.

* * *

கல்கத்தாமாநகரிலுள்ள ராஜதானிக்கல்லூரியானது இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. காரணம்:—அக்கல்லூரியின் சில மாணவர்கள் ஓட்டன் என்னும் பெயருள்ள ஒரு ஐரோப்பிய உபாத்தியாயரை அடித்து விட்டார்களாம். இவ்வுபாத்தியாயர் பாடம் கற்பித்துக்கொடுக்கும்பொழுது அடிக்கடி இந்தியர்களைப் பற்றி இழிவாகக்கூறிவந்தாராம். இதனால் மாணவர்களுக்கும் இவருக்கும் சென்ற சில மாதங்களாகவே மனஸ்தாபம் மிகுந்து வந்தது. ஏதோ ஒருசிறியகுற்றத்தை முன்னிட்டு ஒருமாணவனை இவ்வுபாத்தியாயர் கழுத்தைப் பிடித்துத்தள்ளி அடித்துவிட்டார்; உடனே பிள்ளைகளெல்லோரும் கல்லூரிக்குப்போகாது ஒரே கட்டாக நின்றுவிட்டார்கள். ஓட்டன் மன்னிப்புக்கேட்டுக்கொண்டார்;

மறுபடியும் பிள்ளைகள் திருப்தியுற்று கல்லூரிக்குச் சென்றார்கள். ஆயினும் ஓட்டன் இந்தியர்களைத் தூஷிப்பதை நிறுத்தவேயில்லை. இதனால் சில முரட்டுப்பிள்ளைகள் இவரைக் கீழேதூக்கிப்போட்டுக் கொண்டு நன்றாகப்புடைத்துவிட்டார்கள். வங்காள அரசாங்கத்தார் கல்லூரியை மூடிவிடும்படி உத்தரவுசெய்துவிட்டு உயர்ந்த பதவியினர் சிலரை ஒருகூட்டமாக ஏற்படுத்தி அவர்களைக்கொண்டு இக்கலகத்திற்கு மூலகாரணம் யாதென்றுவிசாரிக்கும்படி செய்திருக்கிறார்கள். விசாரணை நடந்துவருகிறது.

* • *

அக்கல்லூரியின் தலைமை உபாத்தியாயராகிய ஜேம்ஸ் என்னும் பெயருடைய ஐரோப்பியரின் சங்கதிதெரியுமா? மாணவர்கள் ஓட்டனுடைய செய்கைகளையும் பேச்சுக்களையும்பற்றி இத்தலைமை உபாத்தியாயரிடத்தில் பன்முறை முறையிட்டும், இவர் ஓட்டனைக் கண்டிப்பதற்குத் தம்மால் முடியாதென்று கூறிவிட்டார். பிறகு கல்லூரியை மூடிவிட்டு, அரசாங்கத்தார் விசாரணைக்கூட்டம் ஏற்படுத்தியபொழுது, இவர் அரசாங்க நிர்வாகசபையில் ஒரு அங்கத்தினராகிய கௌரவம்மிக்க லியான்ஸ் என்பவரிடம் நேரே சென்று அவரைத்தாறுமாறாகப் பேசிவிட்டார். உடனே அரசாங்கத்தார் இவரை வேலையினின்றும் நீக்கி வேறொருவரைநியமித்து விட்டார்கள். இவர் கௌரம் மிக்க லியான்ஸி னிடத்தில் நிந்தனையாகப் பேசிய குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று மன்னிப்புக்கேட்டுக் கொண்டார். அரசாங்கத்தார் இவருடைய மன்னிப்பை ஏற்றுக் கொண்டு, இவரை வேலையினின்றும் நீக்கிவைத்திருந்த உத்தரவை ரத்துசெய்து, இவருக்கு ரஜா கொடுத்திருக்கிறார்கள்.

* * *

வங்காளமாகாணபதியாகிய கார்மிகேல் பிரபு இவ்விஷயத்தைப்பற்றிச் சம்பத்தில் பிரஸ்தாபிக்கும்படி நேர்ந்தது. அப்பொழுது நமது ஸ்மிருதிகளிலிருந்து இரண்டொரு ஸ்லோகத்தையெடுத்துக்காட்டி சிஷ்யர்கள் குருவினிடத்தில் நடந்துகொள்ள வேண்டியமாதிரி இப்படி யென்றும் ஸ்மிருதிமுறைமைதவறி இந்திய மாணவர்கள் நடப்பதுகுற்றமென்றும் உரைத்தார். இது உண்மையே. எக்காரணத்தை முன்னிட்டும் எவரையும் கைநீட்டலாகாது என்பதே நமது கொள்கை. ஆதலால் சிலமாணவர்கள் ஓட்டனை அடித்துவிட்டதைப்பற்றி நாம் மிகவும் விசனிக்கிறோம்; அடித்த மாணவர்கள் தண்டிக்கப்படவேண்டியதும் அவசியம்.

ஆனால் கார்மிகேல் பிரபு காக்கைப்பார்வை பார்த்ததைப்பற்றி நாம் வருந்துகிறோம். காக்கைக்கு ஒருபக்கப்பார்வைதான் குருவின் லட்சணமும் நமது ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கின்றது கார்மிகேல் பிரபுவின் கண்களில் குருவின் லட்சணங்களைப்பற்றிக்கூறும் ஸ்மிருதிஸ்லோகங்கள் தென்படவில்லைபோலும்! தவிர, ஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ள குருசிஷ்யர்கள் வித்தையை வியாபாரம் செய்யவில்லையென்று கார்மிகேல் பிரபு தெரிந்துகொள்ளவேண்டும். அப்பொழுது அக்காலத்திய குருசிஷ்யர்களுக்கும் கார்மிகேல் பிரபுவின் குருசிஷ்யர்களுக்கும் உள்ளவித்தியாசம் விளங்கும்.

* * *

இக்கல்லூரி விஷயமாக நாம் சிறிது ஆழ்ந்து யோசிக்கும்பொழுது; நமது எண்ணற்ற மாணவர்கள் இத்தகைய உபாத்தியாயர்களிடத்திலிருந்து எவ்விதப் பயிற்சியைபடைவார்கள் என்று நமக்கு ஏக்கமுண்டாகின்றது. "குரு எப்படி, சிஷ்யன் அப்படி". உபாத்தியாயர் ஒரு நிமிஷத்திற்கொருதரம் குதித்தால், சிஷ்யன் ஒரு விநாடியில் ஒன்பதுதரம் குதிக்கப்பழகுவானன்றோ? முதலாவது உபாத்தியாயர்களைச் சீர்திருத்தவேண்டியிருக்கின்றது.

* * *

கல்கத்தாராஜதானிக்கல்லூரியைப்பற்றி நாம் எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே, இச்சென்னையில், ராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி க்கல்லூரியில் நடந்திருக்கிற அக்கிரமம் ஒன்று நமது காதுக்கு எட்டுகின்றது. வருஷந்தோறும் பள்ளிக்கூடமுடிவுப் பரீட்சை (School Finial Examination)க்குச் செல்லும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு சுமார் ஒருவாரத்திற்கு முன்பாக பரீட்சைக்குப் படிப்பதற்காக ரஜா கொடுப்பதுவழக்கம். ஆனால் இவ்வருஷத்தில் பிள்ளைகள் கேட்டுக்கொண்டும் ரஜா கொடுக்கப்படவில்லையாம். ஆகையால் பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்கூடத்திற்கு வாராது நின்றுவிட்டார்கள். மறுநாள் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வாராவிடில் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று ஒரு விளம்பரம் விளம்பரப் பலகையில் போடப்படவே, பிள்ளைகளெல்லோரும் மறுநாள் பள்ளிக்கூடத்திற்குவந்துவிட்டார்கள். ஆயினும் அப்பள்ளிக்கூடத்திற்கு மேற்பார்வையதிகாரியும் உப்பிரதான உபாத்தியாயரும் சேர்ந்துகொண்டு சிலபிள்ளைகளைத் தங்களுடைய தனியறைக்கு இட்டுக்கொண்டுபோய் ஒவ்வொருவருடைய புட்டத்திலும் மும்மூன்று அடி பிரம்பினால்

அடித்தார்களாம். கல்வியிலாகாச்சட்டங்களுள் சகிக்கமுடியாத குற்றத்திற்கு மாணவனுடைய கையில் ஆறு அடி பிரம்பினால் அடிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மேற்படி மேற்பார்வையதிகாரியும் உபப்பிரதான உபாத்தியாயரும் கல்வியிலாகா விதிகளையே அறியார்கள்போலும்! பிள்ளைகளை இப்படியடிப்பது இங்கிலாந்தில் வழக்கமென்றும் ஆயினும் அடித்தவர்கள் தாங்கள் செய்ததைப்பற்றி விசனிக்கிறார்களென்றும் தலைமை உபாத்தியாயர் பத்திரிகைகளில் தெரியப்படுத்தியிருக்கிறார். குற்றம்செய்வதும் மன்னிப்புக்கேட்பதும் சில ஐரோப்பியர்களின் ஸ்வபாவமாகவேயிருக்கிறது. சிறைச்சாலையிற்கூட கைதிகளைச் சவுக்காலடிப்பதற்கு ஒரு வைத்தியர் பக்கத்தில் இல்லாவிட்டால் முடியாது. இங்ஙனம் அடிப்பது மிருகத்தனமான தண்டனையென்றும் இந்நாகரிக காலத்திற்கேற்றதன்றென்றும் பலமேதாவிகள் அபிப்பிராயப்பட்டு வருகிறார்கள். இங்கு அடிபட்ட பிள்ளைகளுடைய பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளின் கௌரதையைக் காப்பாற்றுவதற்கு இந்த விஷயத்தை நியாயஸ்தலத்திற்குக் கொண்டுசெல்லவேண்டியது அவசியம்.

* * *

திருப்பத்தூரில் ஸைக்ஸ் என்னும் பெயருடன் ஒரு நியாயாதிபதியிருந்தார். இவர் சவுக்கடிதண்டனையை சர்வசாதாரணமாக விதிப்பதும் தாமே தமது கையால் மேற்படி தண்டனையை நிறைவேற்றுவதும் வழக்கம். சிறைச்சாலையில் கைதியாயிருக்கின்ற ஒரு பத்திராசிரியருக்கு அந்த சிறைச்சாலை நிர்வாகத்தலைவர் ஏதோ ஒரு குற்றத்திற்காகச் சவுக்கடி தண்டனைவிதித்தார். இதேமாதிரியாக இன்னும் எத்தனையோ கூறலாம். நமக்கு நாகரீகத்தையும் நன்னடத்தையையும் போதிக்க வந்திருப்பதாகக் கூறிக்கொள்கின்ற ஐரோப்பியர்களின் இத்தகைய நடத்தையினால் அவர்களை நாம் எப்படியாவது சீர்திருத்திவிடக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது.